அது இடைஞ்சலாக இருக்கிறது. நில ஆர்ஜிதம் செய்வதில் கறாராக இருந்து ரோடு போடுவதற்கு வீடுகள் கட்டுவதற்கு முன்னுரிமை அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. ஆனாலும் பதில் சொல்கிறேன். தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மானாமதுரையில் வைகை ஆற்றுப் பாலம்

*வினா எண். 193— திரு. க. பாரமலை : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மானாமதுரை நகரில் வைகை ஆற்றின்மீது கட்டப்பட்டிருக்கின்ற பாலத்தைப் புதுப்பிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஆம்—1980–81–ஆம் ஆண்டுக்கான இரண்டாம் பகுதி திட்டத்தின் கீழ் இப்பணிக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

திரு. க. பாரமலை ; பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு அனுமதி வழங்கியிருப்பதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மானாமதுரை மிக வேகமாக வளர்ந்து வருகிற நகரம். சிப்காட் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது, பி. ஆர். சி. ஒர்க்ஷாப்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. ஆகவே தேவையான நடவடிக்கைகளை எடுத்து விரைவாக நிறைவேற்ற அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : வைகை ஆற்றின் குறுக்கே அந்தப் பாலம் இருக்கிறது, அது மிகக் குறுகியதாகவும், பலவீனமானதாகவும் இருப்பதால் இந்தப் பாலத்தை 60 லட்ச ரூபாய் செலவிலே கட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டிருக்கிறது, அதற்கான ஆணை 1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 9-ம் தேதியில் வழங்கப்பட்டு இருக்கிறது. கூடிய சீக்கிரத்திலே வேலைகள் ஆரம்பிக்கப்படும்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, அந்தப் பாலம் காசி-இராமேஸ்வரத்தை இணைக்கக்கூடிய முறையிலே தேசிய நெடுஞ்சாலைகளை இணைக்கக்கூடிய நிலையிலே இருக்கிறது, ஆகவே அதைப் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கிறேன்.